<u>4 வது கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.97/2022          நாள்: 06.09.2024                    வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுச்சாமி | தொழில் | : ஓர்க்ஷாப் |
| த/பெ | : மயில்சாமி | கிராமம் | : கொடுங்கியம் |
| வயது | : 40 | தாலுகா | : உடுமலைப்பேட்டை |
| ஜாதி | : | மாவட்டம் | : திருப்பூர். |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**பிரதிவாதி  குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா கிரைய உடன்படிக்கையானது கடனுக்காக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. தாவா கிரைய உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள தொகைக்கு பிரதிவாதி மாதம் மாதம் வட்டி செலுத்திவந்தார் என்றால் சரியல்ல. கடன் தொகைக்காக தாவா கிரைய உடன்படிக்கை எழுதப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் எழுதிபெற தயாராகஇருக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சிகிச்சைக்காக தொகை கடன் பெற்றார் என்றால் சரியல்ல. 03.02.2022 தேதிய உறுதிமொழி ஆவணம் பற்றி பிராதில் எதுவும் சொல்லவில்லை என்றால் தாவா கிரைய உடன்படிக்கை பற்றிதான் பிராதில் சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்தை கிரையம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய உடன்படிக்கை எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

V JOHN MINO
Digitally signed by V JOHN MINO
Date: 2024.09.06 16:33:12 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.